

தனி பிரதி
ரூ.10/-



PORIYIYAL KADHIR

# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 3 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | பிப்ரவரி 2015

## மரியாதைக்குரிய முதன்மைச் செயலாளர் பொதுப்பணித்துறை அவர்களை சங்கப் பொறுப்பாளர்கள் சந்தித்து புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

**தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் இருந்து பதவி உயர்வு பெற்ற 21 உதவிப் பொறியாளர்களை 3 மாதத்திற்குள் விதித்திருத்தம் வழங்கப்படவில்லையென்றால் பணியிறக்கம் செய்ய வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணை சம்பந்தமாக மரியாதைக்குரிய முதன்மைச் செயலாளர் அவர்களை சந்தித்து விரைவில் விதித்திருத்தம் செய்யவும் அரசு மேல்முறையீடு செய்யவும் கோரிக்கை வைக்கப்பட்டது.**





பொதுச் செயலாளர் மடல்



மடல் - 3 (2014 - 2015)

## தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

கடந்த 26.02.2006 அன்று அரசு ஆணை எண். 1-ன் படி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பிறந்த நாள் பரிசாக வழங்கப்பட்ட நிலுவை விதித்திருத்த ஆணையின்படி [Pending Rule Amendment] 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இதை எதிர்த்து நமது சகோதர சங்கம் வழக்கு தொடுத்தது. மேற்கண்ட 21 உதவிப் பொறியாளர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்யவேண்டும் என்று வழக்கு தொடுத்து இருந்தார்கள். இந்த வழக்கின் இறுதி விசாரணை 16.04.2013 அன்று நடைபெற்று தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் கடந்த 13.11.2014 அன்று அந்த வழக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. 23.12.2014 அன்று அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. 23.12.2014 அன்று அந்த வழக்கு வந்தது, அந்த வழக்கு 23.12.2014 அன்று மீண்டும் இறுதி விசாரணைக்கு வந்தது. நமது வழக்கறிஞராலேயே அந்த செய்தி நமக்கு தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட வழக்கின் தீர்ப்பில் மூன்று மாதத்திற்குள் அரசு ஆணை எண். 1-க்கு விதித்திருத்தம் [Rule Amendment] வழங்கப்படவில்லையென்றால் மேற்கண்ட 21 உதவிப் பொறியாளர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணி இறக்கம் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசு விதித்திருத்தம் வழங்குவதற்கு காலதாமதம் செய்து வருவதற்கு சம்பந்தப்பட்ட தனி நபர்கள் எப்படி பொறுப்பாக முடியும் என்று தெரியவில்லை.

மேற்கண்ட உதவிப் பொறியாளர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்யவேண்டும் என்று நமது சகோதர சங்கம் வழக்கு தொடுத்தது எவ்வளவு பெரிய மனிதாபிமானமற்ற செயல். இவர்களையெல்லாம் மீண்டும் செயற்பொறியாளர்களாகவோ, உதவி செயற்பொறியாளர்களாகவோ, உதவிப் பொறியாளர்களாகவோ பதவி இறக்கம் செய்தால் எப்படி இருக்கும்?

அரசாணை எண். 1-ஐ ஒழித்துக்கட்டுவதற்கு இலட்ச கணக்கில் நிதி கொடுங்கள் என்று வெளிப்படையாக பேசும் செயல் இங்குதான் நடைபெறுகிறது.

சக அரசு ஊழியர்களை ஒழித்துக்கட்டுவதற்கு போராடும் ஒரே சங்கம் நமது சகோதர சங்கமாகத்தான் இருக்கமுடியும். பட்டயப் பொறியாளர்களையெல்லாம் ஒழித்துவிட்டு இவர்கள் எதை சாதிக்கபோகிறார்கள் என்று தெரியவில்லை. பட்டயப் பொறியாளர்களால் மட்டுமே கடுமையாக உழைக்க முடியும் என்பது ஊரறிந்த உண்மை. பட்டயப் பொறியாளர்களை ஒழித்துவிட்டால் அவர்களுக்கோ, துறைக்கோ என்ன நன்மை கிடைத்துவிடப்போகிறது.

பொதுப்பணித்துறை அழிவுப்பாதையை நோக்கி செல்ல ஆரம்பித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. பட்டயப் பொறியாளர்களையும் பகுதிநேர பட்டம் பெற்ற நமது பொறியாளர்களையும் ஒழித்துக்கட்ட பணபலம், அதிகாரபலம் ஆகியவற்றை பயன்படுத்தி வருகிறார்கள். துறைத்தலைமையாக வருகிறவர்கள் நீதிபதிகள் போல் நடுநிலையாக இருக்க வேண்டியவர்கள், சொந்த விருப்பு, வெறுப்பு காரணமாக நடுநிலைமை தவறி ஒருதலைபட்சமாக, ஒரு சார்பாக நடப்பதுதான் கோளாறு.

இந்த தீர்ப்பு, வலை தளத்தில் வெளியானவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 05.01.2015 அன்று சந்தித்து பிரச்சினைகளை விவரித்தோம். இந்த வழக்கின்மீது அரசு மேல்முறையீடு செய்யவேண்டும் மற்றும் அரசாணை எண்.1-க்கு விரைந்து விதித்திருத்தம் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தோம். விரைந்து ஆவண செய்வதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதி அளித்தார்கள். அன்றே முதன்மைச் செயலாளர் பொதுப்பணித்துறை அவர்களை சந்தித்து மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தினோம். கண்டிப்பாக நியாயம் கிடைக்க ஆவண செய்வதாக உறுதியளித்தார்கள்.

2005 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராகவும் மரியாதைக்குரிய முதன்மைச் செயலாளர் பொதுப்பணித்துறை அவர்கள் பொதுப்பணித்துறை செயலாளராகவும் இருந்தபோது தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொறியாளர் சங்கம் இரண்டையும் அழைத்து சமரசம் செய்து வைத்தபிறகு, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்தநாள் பரிசாக நிலுவை விதித்திருத்த ஆணை வழங்கப்பட்டதின் அடிப்படையிலேயே மேற்கண்ட 21 நபர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டதையும் நினைவுப்படுத்தினோம்.

இந்த வழக்கில் சங்கத்தின் துணையோடு தனிநபர்களின் பெயர்களில் மேல்முறையீடு செய்துள்ளோம். விரைவில் சங்கத்தின் பெயரிலும் இந்த வழக்கில் இணைய இருக்கிறோம். இந்த வழக்கு 30.01.2015, 06.02.2015 ஆகிய தேதிகளில் நீதியரசர்கள் அக்னி ஹோத்ரி, வேணுகோபால் ஆகியோர்கள் அடங்கிய பெஞ்சில் விசாரணைக்கு வந்து 26.02.2015 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த தீப்பின் மூலம் நம்மை ஒழித்துவிடமுடியும் என்று சிலர் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். சவப்பெட்டிக்குள் அடைத்து சமாதி கட்டிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த சவப்பெட்டியை உடைத்துக்கொண்டு மீண்டும் புதிய வேகத்துடன் வெளிவருவோம்.

இந்த தீர்ப்பு நமக்கு பின்னடைவு என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த தீர்ப்பு நமக்கு பின்னடைவு இல்லை என்பதை நிரூபித்துக்காட்டுவோம். மைனசை (-) ப்ளஸ் (+) ஆக்கிக்காட்டுவோம்

"துப்பாக்கி எடுத்தாகிவிட்டது. தோட்டாக்கள் நிரப்பி ஆகிவிட்டது. சுடவேண்டியது மட்டும்தான் பாக்கி" என்று நமது சகோதர சங்கத்தை சார்ந்த ஒரு பொறுப்பாளர் பேசியிருக்கிறார்.

"உண்மைதான். போர்க்களத்தில் அவர்களிடம் ஏகே 47-ஐ விட பலம் வாய்ந்த ஆயுதங்கள் உள்ளன. நாம் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கிறோம்."

நமது சகோதர சங்கத்திடம் பணபலம் , அதிகாரபலம் போன்ற பலம் வாய்ந்த ஆயுதங்கள் உள்ளன. ஆனால் நம்மிடம் நியாயம், தர்மம், அஹிம்சை போன்ற அதைவிட பலம் வாய்ந்த ஆயுதங்கள் உள்ளன. இவற்றைக்கொண்டு சதிகள் அனைத்தையும் முறியடித்து காட்டுவோம்.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 40 பொறியாளர்களுக்கு பணி அமர்வு ஆணை வழங்க வேண்டியது இருந்தது. ஆனால் 14 உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் மட்டுமே காலியாக இருந்தது. இந்த பதவி உயர்வு பட்டியல் 6.2.2015 அன்று காலாவதி ஆக வேண்டியிருந்ததால் சுமார் 26 உதவி செயற்பொறியாளர்களை கட்டாய விடுப்பில் அனுப்பிவிட்டு மீதமிருந்த 40 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டது.

உதவி செயற்பொறியாளர்களாக பணியாற்றும் நமது உறுப்பினர்கள் சிலரை விடுப்பில் அனுப்பவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களும் பொறியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அவர்களும் நம்மிடம் கூறினார்கள். ஆனால் நமது மைய சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரின் ஒருமித்த கருத்தோடு, தற்போது காலியாக உள்ள பணியிடங்களை மட்டுமே நிரப்ப வேண்டும் என்று கடிதம் கொடுத்தோம். ஆனால் அதையும் மீறி சுமார் 26 நபர்களை விடுப்பில் அனுப்பிவிட்டு 40 பேருக்கு உதவி செயற்பொறியாளர் பணியமர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பட்டயம் பயின்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பில் சில விபரங்கள் கோரப்பட்டு அரசிடம் இருந்து தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இன்னும் அரசுக்கு கேட்கப்பட்ட விபரங்கள் அனுப்பப்படவில்லை. நாம் பல முறை சொல்லியும் இந்த கோப்பு இன்னும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. இது மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

பட்டயம் பயின்ற பணி ஆய்வாளர்களுக்கு வரைவாளர் பதவி உயர்வு அளிக்க விபரங்கள் கோரப்பட்டு கருத்துரு, அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும், தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பணி ஆய்வாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு பெறவேண்டுமானால் புதிய தொழில்நுட்ப உதவியாளர் உடலக பதவிகள் உருவாக்கப்படவேண்டும். ஆனால் வரைவாளர் பதவி வேண்டுமானால், தொழில்நுட்ப உதவியாளர் பதவியைவிட விரைவாக கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப விபரங்களை அனுப்பிவைக்க கேட்டுக்கொள்கிறோம். கருத்துரு இந்த இதழில் பக்கம் 8, 9 மற்றும் 10 -ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er. D. MURUGESAN, General Secretary
Cell Phone Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

## தகவல்

அவசர சங்கப் பணி காரணமாக மாநிலத் துணைத் தலைவர் பொறி.சி.கணபதி அவர்களும், பொதுச் செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்களும் வெளியூர் செல்ல வேண்டி இருந்ததால் இருவரும் மாநில செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.**

## தகவல்

மாநில செயற்குழுக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்

## பொதுச் செயலாளர் செல்பேசி எண் மாற்றம்

பழைய செல்பேசி எண்: 92813 09688 பதிலாக
புதிய செல்பேசி எண்: 988 444 98 97

**பெறுநர்**
**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,**
**புனித ஜார்ஜ் கோட்டை,**
**சென்னை - 600 009.**

மாண்புமிகு அய்யா,

**பொருள் :** பொதுப்பணித்துறை - விதித்திருத்தம் [Rule Amendment] வழங்க தாமதமாவதால் உதவிப் பொறியாளர்களை தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய நீதிமன்ற ஆணை - 200 உதவிப் பொறியாளர்கள் வாழ்க்கை பாதிப்பு - விதித்திருத்தம் வழங்க கோருதல் மற்றும் வழக்கின் தீர்ப்பின்மீது மேல் முறையீடு செய்யக் கோருதல் - சம்பந்தமாக.

**பார்வை :** 1. அரசு கடித எண். 26642 / பி2 / 2003 - 10 நாள். 24.02.2006.
2. உயர்நீதிமன்ற தீர்ப்பு WP. No. 11148 / 2007 நாள். 23.12.2014.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் பரிசாக** பார்வை 1-ல் கண்ட தங்களால் வழங்கப்பட்ட ஆணையின்படி பகுதிநேரப் பட்டப்படிப்பு படித்து 5 வருடங்கள் பணி முடித்த 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு **உதவிப் பொறியாளர்** பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

இதை எதிர்த்து பொறியாளர் சங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அந்த வழக்கில் பார்வை 2-ல் கண்டுள்ளவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பில் 3 மாதத்திற்குள் விதித்திருத்தம் வழங்கப்படவில்லையென்றால் மேற்கண்ட உதவிப் பொறியாளர்களை தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இதனால் துறையில் பணியாற்றும் 200 உதவிப் பொறியாளர்களின் வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

பார்வை 2-ல் கண்டுள்ள தீர்ப்பு **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் பரிசாக** துறையில் பணிபுரியும் **பகுதிநேரப் பட்டம் பயின்ற பொறியாளர்களுக்காக** வழங்கப்பட்ட ஆணைக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் பரிசீலனையில் உள்ள விதித்திருத்த கோப்பு நிர்வாக காரணங்களினால் காலதாமதம் ஆகி வருகிறது.

எனவே விரைவில் விதித்திருத்தம் வழங்கியும், மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பின் மீது மேல்முறையீடு [Appeal] செய்தும் 200 உதவிப் பொறியாளர்களின் வாழ்க்கையை பாதுகாக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இணைப்பு:** 1. உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பு: WP No. 11148 / 2007.
2. எங்கள் சங்க கடித நகல்.

(த.முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை -5.

பெறுநர்
அரசு முதன்மை செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

அய்யா,

**பொருள் :** பொதுப்பணித்துறை - விதித்திருத்தம் [Rule Amendment] வழங்க தாமதமாவதால் உதவிப் பொறியாளர்களை தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய நீதிமன்ற ஆணை - 200 உதவிப் பொறியாளர்கள் வாழ்க்கை பாதிப்பு - விதித்திருத்தம் வழங்க கோருதல் மற்றும் வழக்கின் தீர்ப்பின்மீது மேல் முறையீடு செய்யக் கோருதல் - சம்பந்தமாக.

**பார்வை :**
1. அரசு ஆணை எண். 1 / பொ.ப.து., / பி2 - நாள். 02.01.1990.
2. அரசு கடித எண். 26642 / பி2 / 2003 - 10 நாள். 24.02.2006.
3. உயர்நீதிமன்ற தீர்ப்பு WP. No. 11148 / 2007 நாள். 23.12.2014.

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையின்படி பார்வை 2ல் கண்டுள்ள நிலுவை விதித்திருத்த (Pending Rule Amendment) ஆணையின் படி பகுதிநேர பட்டப்படிப்பு படித்து 5 ஆண்டுகள் பணி முடித்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

இதை எதிர்த்து பொறியாளர் சங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அந்த வழக்கில் பார்வை 3-ல் கண்டுள்ளவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பில் 3 மாதத்திற்குள் விதித்திருத்தம் வழங்கப்படவில்லையென்றால் மேற்கண்ட உதவிப் பொறியாளர்களை தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று தீரப்பில் கூறப்பட்டுள்ளது. இதனால் துறையில் பணியாற்றும் 200 உதவிப் பொறியாளர்களின் வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

பார்வை 3-ல் கண்டுள்ள தீர்ப்பு **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் பரிசாக** துறையில் பணிபுரியும் **பகுதிநேரப் பட்டம் பயின்ற பொறியாளர்களுக்காக** வழங்கப்பட்ட ஆணைக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் பரிசீலனையில் உள்ள விதித்திருத்த கோப்பு நிர்வாக காரணங்களினால் காலதாமதம் ஆகி வருகிறது.

எனவே விரைவில் விதித்திருத்தம் வழங்கியும், மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பின் மீது மேல்முறையீடு [Appeal] செய்தும் 200 உதவிப் பொறியாளர்களின் வாழ்க்கையை பாதுகாக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இணைப்பு:**
1. உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பு: WP No. 11148 / 2007.
2. எங்கள் சங்க கடித நகல்.

(கு.முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை -5.

பெறுநர்

மாண்புமிகு தமிழக முதல்வர்
மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

அரசு முதன்மை செயலாளர்,
நிதித்துறை
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

அரசு முதன்மை செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

அய்யா,

பொருள் : **பொதுப்பணித்துறை - வெளிப்படையான சட்ட மீறல்** - 2013 - 2014 உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு - 169 பொறியாளர்களுக்கு அரசு ஆணை - சுமார் **30 உதவி செயற்பொறியாளர்களை வற்புறுத்தி விடுப்பில் அனுப்பிவிட்டு** மீதமுள்ளவர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்குதல் - விதிமீறல் - சம்பந்தமாக.

**பார்வை :** 1.அரசு ஆணை எண். (2னு) 8 / பொதுப்பணித்(யு2)துறை/ நாள்.07.02.2014.
2. எங்கள் சங்க கடித எண். 13 / பொ.செ. 1-15 நாள். 21.01.2015.

பார்வை (1) ல் கண்டுள்ள அரசு ஆணையின் படி 169 இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க ஆணை வழங்கப்பட்டது. ஆனால் துறையில் 86 உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் மட்டுமே காலியாக இருந்ததால் முதற்கட்டமாக 86 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பணியமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதற்கு பிறகு 24 பொறியாளர்களுக்கும் அடுத்து 19 பொறியாளர்களுக்கும் உதவி செயற்பொறியாளர் பணியமர்வு ஆணை வழங்கப்பட்டது.

வெறும் 86 காலிப்பணியிடங்கள் இருந்த நிலையில் 169 என்று தவறான எண்ணிக்கையை அரசுக்கு கருத்துரு அனுப்பி பார்வையில் கண்டுள்ள அரசாணை பெறப்பட்டுள்ளது.

இந்த பதவி உயர்வு பட்டியல் வருகிற 06.02.2015 அன்று காலாவதியாகிறது. மீதமுள்ள 40 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பணியமர்வு ஆணை வழங்க போதுமான காலிப்பணியிடங்கள் இல்லை என தெரியவருகிறது. அதனால் ஏற்கனவே உதவி செயற்பொறியாளர்களாக பணியாற்றுபவர்களை விடுப்பில் அனுப்பிவிட்டு போலியாக காலிப்பணியிடங்களை உருவாக்கி அந்த காலியிடங்களில் இவர்களை பணியமர்வு செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரியவருகிறது. இதனால்,

1. அரசுக்கு தேவையற்ற கூடுதல் செலவினம் ஏற்படும்.
2. இல்லாத காலிப்பணியிடங்களை திட்டமிட்டு போலியாக காலிப்பணியிடங்களை உருவாக்குவது விதிகளுக்கு புறம்பானது மட்டுமல்லாமல் அரசை ஏமாற்றும் செயலாகும்.
3. இப்படி விதிகளுக்கு புறம்பாக இல்லாத காலிப்பணியிடங்களை உருவாக்கி மற்றவர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்க வேண்டிய அவசியம் தற்போது ஏதும் இல்லை. ஏனென்றால் இந்த பதவி உயர்வு பட்டியலில் உள்ளவர்கள் யாரும் பணி ஓய்வு பெறப்போவதில்லை.
4. 30 உதவி செயற்பொறியாளர்களை விடுப்பில் அனுப்பிவிட்டு அந்த காலிப்பணியிடங்களுக்கு புதிதாக 30 உதவி செயற்பொறியாளர்களை பணியமர்வு செய்தால் 30 காலிப்பணியிடங்களுக்கு 60 உதவி செயற்பொறியாளர்களுக்குரிய சம்பளம் வழங்க வேண்டி வருவதால் **அரசுக்கு தேவையற்ற கூடுதல் செலவினம் ஏற்படும்.**
5. இது ஒரு வெளிப்படையான சட்டத்திற்கு புறம்பான செயல் ஆகும்.

இதனால் தற்போது எத்தனை காலிப்பணியிடங்கள் உள்ளதோ அந்த காலிப்பணியிடங்களை மட்டும் நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ் நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

# தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

அனுப்புநர்
பொறி. S. சம்பத், M.E.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

பெறுநர்
1. முதன்மை தலைமைப் பொறியாளர் (க)
(ம) தலைமைப் பொறியாளர் (க),
சென்னை மண்டலம், சென்னை 5.
2. அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
நீர்வள ஆதாரத் துறை / கட்டடம்

**கடித எண். எஸ். 5(2) / 041710 / 2014 நாள்: 23.12.2014**

அய்யா,

**பொருள்:** பணியமைப்பு - பொதுப்பணித்துறை - த.நா.பொ.சா.ப. தொகுதி 2014 - 2015- ஆம் ஆண்டிற்கான பிற பதவிகளில் இருந்து பதவி மாற்றம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர் பணிநியமனம் - தொடர்பாக.

**பார்வை:** 1. திரு. ச. கணேசபெருமாள், பாசன ஆய்வாளர் அவர்களின் விண்ணப்பம், நாள். 09.06.2014.

2. தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடித எண். சி4 / 7232 / 2014 (9191) நாள்:18.08.2014.

பார்வை 2-ல் காணும் தலைமைப் பொறியாளர், நீஆது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்கள் கடிதம் வாயிலாக பார்வை 1-ல் காணும் திரு.ச.கணேசபெருமாள், பாசன ஆய்வாளர் அவர்கள் பதவி மாற்றம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலராக பணிநியமனம் வழங்கக் கோரியுள்ளார். இதனைப் போன்று 2014 - 2015-ஆம் ஆண்டு பிறபதவிகளில் இருந்து பதவி மாற்றம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர் பணிநியமனம் பெற தகுதியுடைய அலுவலர்களுக்கு தேர்ந்த பெயர்ப்பட்டியல் தயாரிக்க தங்கள் மண்டலம் / அலுவலகக் கட்டுப்பாட்டில் விருப்பம் உடையவர்கள் எவரேனும் இருப்பின் அவர்களின் பணிவிவரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து உரிய வழிமுறையாக வரும் 12.01.2015-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** பணிவிவரப்படிவம்.

ஒம்/- S. சம்பத்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,
மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்

## O/o The Engineer - in - Chief, WRD and Chief Engineer (General), PWD., Chennai - 5.

## PROFORMA

## ANNEXURE - I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | (a) | Name and Designation of the Officer and the Scale of pay attached to the post now held / One Unit Seniority No. in the Post of | | |
| | (b) | Classification of Community (SC/ST/BC/MBC/DNC/SC) | | |
| | (c) | Name of the Community as specified in the General Rules (Except OC C(B) and (C) are applicable only for the posts for which rules of reservation is followed for recruitment by transfer to higher posts) | | |
| 2. | | Age and Date of Birth | | |
| 3. | | Date of Retirement | | |
| 4. | | Educational Qualification special qualification if any passing of Account Test with month of passing the year | | |
| 5. | | Training undergone | | |
| 6. | | Date of Appointment, Date of Completion of probation and total service in the post present held if for C.D period from which he is on O.D from first appointment to till this date | | |
| 7. | | Whether the Officer has acquired all the qualifications prescribed in the special adhoc rules for Higher Post (including previous experience, teaching experience speical training) | | |
| 8. | | Whether any charges are pending against the officers and if so indicate the charges and date from which pending the present state, reasons for delay in finalizing the disciplinary proceedings whether any appeal are pending and if so the present stage. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | | Extract of changes pending under rules Tamil Nadu Civil Service, Classification Control and Appeal Rule | | |
| | (a) | i)<br>ii)<br>iii) | | |
| | (b) | Extract of lapse for which disciplinary action under Rule 17 (a) of Tamil Nadu Civil Services Classification Control and Appeal Rule have been instituted | | |
| 10 | (a) | Whether any vigilance or other enquiry are pending against the officer and if so indicate the details thereof nature of irregularities lapses for which he is proceeded against period to which lapses related. | | |
| 11 | | Whether any penalties have been imposed on the officer and if so the nature of lapses and penalties proposed and date of imposition of the punishment Copies of order imposing punishment should be attached | | |
| | (a) | Whether the penalties have been given effect to if not the reasons therefore | | |
| | (b) | Whether on suspension or undergoing punishment at the time of consideration | | |
| 12 | (i) | Whether there are any adverse remarks in his personal file and if so indicate the details therefore and whether they have been communicated to the individual | | |
| | (ii) | Resume of personal file for the last 5 years | | |
| From | To | Rating | | |
| | | | | |
| 13. | | Whether the individual has been considered earlier in the last panel and passed over if so the reasons therefore may be indicated | | |
| 14. | | Whether the individual has relinquished his high of promotion and if so details there on | | |
| 15. | | Specific recommendation of SE concerned | | |

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**Reserved on: 13.11.2014**
**Delivered on : 23.12.2014**
**CORAM:**
**THE HONOURABLE MR. JUSTICE P.R. SHIVAKUMAR**
**Writ Petition Nos. 11148 and 21344 of 2007**
**&**
**M.P. No. 2 of 2007**

Writ Petition No. 11148 of 2007

Association of Engineers
Tamil Nadu Public Works Department
Chepauk
Chennai - 600 005
Rep. By its General Secretary
D. Arumugam ..... Petitioner

Vs.

1. The State of Tamil Nadu
   Rep. By its Secretary to Government
   Public Works Department
   Fort. St. George, Chennai – 9

2. The Engineer in Chief W.R.O &
   Chief Engineer (General)
   Public Works Department
   Chepauk
   Chennai - 600 005
3. P. Sekar
4. T. Venkatesan
5. T. Arivumani
6. C.K. Gnanasekaran
7. S.S. Shanthi
8. R. Chandrasekar
9. T. Thangarathinam
10. M. Muthukrishnan
11. M. Thanumoorthy
12. D. Elangovan
13. G. Balasubramanian
14. S. Jeganathan
15. M. Pandi Selvi
16. J. Amutha
17. R. Thiagarajan
18. N. Murugesan
19. A. Singaravadivelu
20. P.S. Sivakumar
21. T. Chellam
22. P. Karthikeyan

23. C. Balamuralitharan
24. Tamil Nadu Engineering Association
Public Works Department
Chepauk, Chennai – 5
Rep by its Secretary (Organisation & Legal).
Mr. D. Murugesan
R24 impleaded as per order dated 8.8.07 in M.P.No. 3/07 in
W.P.11148 / 07 ..... Respondents

Prayer in W.P. No. 11148 of 2007: Writ Petition filed under Article 226 of the Constitution of India, to issue a writ of certiorarified mandamus calling for the records of the 2nd respondent in proceeding No. S2(2) / 29148 / 2004 – 24 dated 27.02.2006 and quash the same and consequently set aside the appointments of respondents 3 to 23 as Assistant Engineers and revert them back to the post of Technical Assistants.

Writ Petition No. 21344 of 2007

Association of Engineers
Tamil Nadu Public Works Department
Chepauk
Chennai – 600 005
Rep. By its General Secretary
D. Arumugam ..... Petitioner

Vs.

1. The State of Tamil Nadu
   Rep. By its Secretary to Government
   Public Works Department
   Fort. St. George
   Chennai – 600 009.

2. The Engineer in Chief W.R.O. &
   Chief Engineer (General)
   Public Works Department
   Chepauk
   Chennai – 600 005

3. Tamil Nadu Engineering Association
   Public Works Department
   Chepauk. Chennai – 600 005
   Rep. By its General Secretary

4. Thiru. S. M. Muruganatham
   Junior Engineer
   Lower Vaigai Basin Sub Division, Thiruvadanai
   Ramnad District ..... Respondents

R3 & R4 impleaded as per order dated 4.7.2007
in M.P. No. 2 & 3 of 2007 in W.P. 21344 / 07

Prayer in W.P. No. 21344 of 2007: Writ Petition filed under Article 226 of the Constitution of India, to issue a writ of mandamus to forbear the respondents from promoting any technical Assistants as Assistant Engineers through recruitment by transfer in violation of the orders of the High Court dated 06.11.2006 in W.P.No. 7523 of 1997 and also that of the Tamil Nadu Administrative Tribunal dated 17.04.1997 in O.A. No. 3348 of 1994.

| | | |
|---|---|---|
| For Petitioner | : | Mr. Navin Kumar for<br>M/s.S.T.S. Murthi |
| For Respondents | : | Mr. M.S. Ramesh<br>Additional Government Pleader<br>for R1 and R2<br><br>Mr. M. Rajasekhar for R3<br>Mr. S. Ravi for R11 to 16,21,23 and 24<br>M/s. Malarvizhi Udayakumar<br>for R3 to R10, 17 to 20 and 22 |

COMMON ORDER

The Association of Engineers, Tamil Nadu Public Works Department, Chepauk, Chennai, represented by its General Secretary D. Arumugam has filed W.P. No. 11148 of 2007 praying for the issue of writ of Certiorarified Mandamus to quash the order of the Engineer – in – Chief, W.R.O. & Chief Engineer (General), Public Works Department, Chepauk, Chennai (Second respondent in W.P.No. 11148 of 2007) issued in his proceedings No. S2(2) / 29148 / 2004 – 24 dated 27.02.2006 and to set aside the appointment of respondents 3 to 23 in the said writ petition (private respondents) as Assistant Engineers by way of recruitment by transfer from the post of Technical Assistant and revert them back to the post of Technical Assistant.

2. W.P. No. 21344 of 2007 has been filed by the very same Association praying for the issue of writ of mandamus forbearing the State of Tamil Nadu and Engineer – in – Chief, W.R.O & Chief Engineer (General), Public Works Department, Chepauk, Chennai, (the respondents 1 and 2 in the said writ petition) from promoting any Technical Assistant as Assistant Engineer through the method of recruitment by transfer in violation of the orders of the High Court dated 06.11.2006 made in W.P. No. 7523 of 1997 and also that of the Tamil Nadu Administrative Tribunal dated 17.04.1997 made in O.A. No. 3348 of 1994.

3. Tamil Nadu Engineering Service Special Rules govern the posts of Assistant Engineer, Assistant Executive Engineer, Executive Engineer including Deputy Chief Engineer, Superintending Engineer including Senior Deputy Chief Engineers and Chief Engineer. The post of Assistant Engineers in Public Works Department comes under Category 5 of Branch – I – Public Works. The methods of appointment to the post of Assistant Engineer as stipulated in the said rule are as follows:

1) Direct recruitment; and

2) Recruitment by transfer from Junior Engineers, Head Draughtsman and Civil Draughtsman of the Tamil Nadu Engineering Subordinate Service.

4. The question of appointment of Assistant Engineers through Public Service Commission by direct recruitment is not an issue in these writ petitions. The issue involved in these writ petitions is confined to the second method of appointment, namely recruitment by transfer from the cadres of Tamil Nadu Engineering Subordinate Service. The rule provided Junior Engineers, Head Draughtsman and Civil Draughtsman Grade I alone as the feeder categories for the post of Assistant Engineers to be filed up by the method of recruitment by transfer. The qualification for such appointment through recruitment by transfer from the Tamil Nadu Engineering Subordinate Service are as follows.

1) Should have obtained a decree in Civil Engineering after having entered into the service as Junior Engineer; or

2) Should have passed Sections (A) and (B) of the institution of Engineers examination under Civil Engineering branch subject to certain conditions. The conditions are

(i) he should furnish evidence of having undergone practical training for a period of not less than one year; or

(ii) should have been in service for a period of not less than one year in Public Works Department as Overseer or Junior Engineer;

(iii) should hold the LCE Deploma issued by the College of Engineering Guindy; or

(iv) LCE or Diploma awarded by the State Board of Technical Education and Training, Madras.

The post of Technical Assistant did not figure as a feeder category for appointment as Assistant Engineer by recruitment by transfer.

5. However, when an advertisement was made by Tamil Nadu Public Service Commission inviting applications through Advertisement No. 9/94 dated 31.05.1994 for direct recruitment of Assistant Engineers, a batch of original applications, namely O.A. No. 3348 of 1994, 3631 of 1994, 3983 of 1994, 4563 of 1994, 4564 of 1994, 55 of 1995 and 2774 of 1995 came to be filed before the then Tamil Nadu Administrative Tribunal challenging the said notification and praying for a direction to consider the willingness of the applicants therein for appointment as Assistant Engineers on the basis of G.O. Ms. No. 1, Public Works Department dated 02.01.1990 and G.O. Ms. 88, Public Works Department dated 22.01.1991 towards the vacancies that arose from 1986 onwards. In the said Original Applications, the notification was challenged on the ground that the ratio of 3:1 fixed between the direct recruits and the recruits by transfer from the Tamil Nadu Engineering Subordinate Service was not followed and it was sought to be given a go by. On that ground the prayer for quashing the advertisement and preventing publication of results had been sought for. O.A. Nos. 4563 of 1994 and 4564 of 1994 came to be filed by the Technical Assistants praying that they should be promoted as Junior Engineers on their acquiring B.E. degree in Electrical and Electronics for their re-designation as Assistant Engineers.

6. The Tribunal, after considering the rival contentions made therein, chose to hold that the ratio of 3:1 prescribed between the direct recruits and recruits by transfer from the Engineering Subordinate Service was not maintained and accordingly quashed the Service Commission's Advertisement No. 9/94 dated 31.05.1994 and the results published thereto. The Tribunal also directed that out of the 15 vacancies notified by the Tamil Nadu Public Service Commission in the advertisement impugned therein, the applicants in the concerned original applications should be considered along with other feeder categories in tune with Rule 2(a) (5) of Tamil Nadu Engineering Service Special Rules for recruitment by transfer by allotting one out of four vacancies to such persons. A further direction was also issued to fill up the future vacancies in the same ratio till the statutory rule shall be amended. However, the Tribunal dismissed the claim made by the Technical Assistants on the ground that the post of Technical Assistant was not a feeder category for appointment as Assistant Engineer by recruitment by transfer from the Tamil Nadu Engineering Subordinate Service.

7. That part of the order of the Tribunal dismissing the Original Application filed by the Technical Assistants was not challenged by taking up the matter either to the High Court or to the Supreme Court. On the other hand, the Association of Engineers, Tamil Nadu Public Works Department, Chepauk, Chennai (the writ petitioner in the present writ petitions) chose to file a writ petition in W.P. No. 7523 of 1997 challenging the order of the Tribunal dated 17.04.1997 made in O.A. No. 3348 of 1994. A Division Bench of this Court by order dated 06.11.2006 confirmed the order of the Tribunal and dismissed the said writ petition holding t hat Junior Engineers, Overseers, Head Draghtsmen and Civil Draghtsmen of the

Tamil Nadu Engineering Subordinate Service were the feeder categories for appointment to the post of Assistant Engineer by the method of recruitment by transfer from the Tamil Nadu Engineering Subordinate Service, as per Rule 2(a) (5) of the Special Rules for Tamil Nadu Engineering Service. It was also held therein that the Special Rules did not provide for the ratio between the direct recruits and the appointees by transfer from the Tamil Nadu Engineering Subordinate Services, it was a field unoccupied by the statutory rules capable of being supplemented by administrative instructions and that hence, till a rule is framed fixing the ratio, the ratio fixed by the Government by its Administrative order made in G.O. (Ms) No. 1, Public Works Department dated 02.01.1990 prescribing the ratio of 3:1 would apply.

8. Thereafter, on the basis of a representation made by the persons in the Tamil Nadu Engineering Subordinate Service including Technical Assistants, who possessed decree or equivalent qualification in Engineering, the Government in Public Works Department Letter No. 51043 / B2 / 97 – 4 dated 01.04.1998, issued instructions that the personnels in the categories of Junior Draghting Officers, Draughting Officers and Overseers, except Technical Assistants, were eligible to be appointed as Assistant Engineers by recruitment by transfer against the vacancies apportioned to be filled up by recruitment by transfer subject to the outcome of the writ petition W.P. No. 7523 of 1997. However, the representation of the Technical Assistants for their inclusion in the feeder categories was not favourably considered.

9. During the years 1999, 2000, 2001 and 2002, a total number of 491 vacancies in the post of Assistant Engineers were notified to be filled up. Out of the same, 369 were to be filled up by direct recruitment and the remaining 122 were to be filled up by recruitment by transfer. Out of the said 122 vacancies referable to the feeder categories for appointment by recruitment by transfer, 29 vacancies alone had been filled up by 27.02.2006. Stating that there was dearth of eligible candidates for the remaining 93 vacancies and thus, they remained vacant, the Government issued directions to the second respondent under Government Public Works Department Letter No. 26642 / B2 / 03 – 10 / dated 24.02.2006 to issue proceedings appointing persons in the category of Technical Assistant, who possessed B.E / A.M.I.E qualification in Civil Engineering and have rendered 5 years of service on temporary basis under Section 10(a) (i) of the General Rules for the Tamil Nadu Engineering Subordinate Service, subject to the result of the writ petition in W.P. No. 7523 of 1997 then pending on the file of the High Court of Madras. Accordingly, 21 Technical Assistants, who are the respondents 3 to 23 in W.P. No. 11148 of 2007, were promoted (recruited by transfer) as Assistant Engineer by the above said impugned order. The said order is impugned in W.P. No. 21344 of 2007 on the ground that such an order was issued in violation of the orders of the Tamil Nadu Administrative Tribunal dated 17.04.1997, which was also confirmed by a Division Bench of this Court by its order dated 06.11.2006 made in W.P. No. 7523 of 1997. It is contended that the impugned order is against the statutory rules governing the methods of appointment to the post of Assistant Engineer in Public Works Department. W.P. No. 21344 of 2007 is the offshoot of W.P. No. 11148 of 2007 as it has been filed for a writ of mandamus forbearing the respondents from making any further appointment to the post of Assistant Engineer by recruitment by transfer from the cadre of Technical Assistant.

10. It is the contention of the learned counsel for the petitioner Association that though the Government is entitled to issue administrative orders and administrative directions in implementation of the statutory rules framed under Article 309 of the Constitution of India, such orders should not be repugnant to the statutory rules and to the extent of repugnancy, such administrative orders / directions shall be invalid as being ultravires the statutory rules. It is the further contention of the learned counsel for the petitioner Association that though initially the

post of Junior Engineer, Overseer and Senior Draghting Officer (Draghtsman Grade I) alone were included in the feeder categories for the post of Assistant Engineer for recruitment by transfer, subsequently by an amendment to the statutory rule, Draghtmen Grade II and III were also included in the feeder categories, leaving the cadre of Technical Assistant out of the feeder categories for appointment as Assistant Engineers by way of recruitment by transfer from the Tamil Nadu Engineering Subordinate Services and that since the rule excluded the category of Technical Assistant from the feeder categories, no administrative order / direction falling short of amendment to the rule can cloth them with the right to be included in the feeder categories for appointment to the post of Assistant Engineer by way of recruitment by transfer. It is the further contention of the learned counsel for the petitioner that instead of making the rule making authority to amend the rule and awaiting till such amendment, the Government chose to adopt a bypass route by issuing an administrative direction for appointing Technical Assistants possessing decree / A.M.I.E. qualification with 5 years experience to the post of Assistant Engineers by way of recruitment by transfer that such an approach is squarely against the statutory rule; that hence, the order dated 27.02.2006 impugned in W.P. No. 11148 of 2007 is liable to be quashed and that the petitioner Association is entitled to the issuance of the writ of Mandamus forbearing the respondents 1 and 2 in W.P. No. 21344 of 2007 from making any further appointment by way of recruitment by transfer from the post of Technical Assistant unless and until the post of Technical Assistant is included as a feeder category by amending the statutory rule. Learned counsel for the petitioner has also contended that since the appointment of respondents 3 to 23 in W.P. No. 11148 of 2007 were made in violation of the statutory rules, the order promoting them as Assistant Engineers has got to be set aside and the respondents 3 to 23 are liable to be reverted back as Technical Assistants.

11. In this regard, the learned Government Pleader, representing the State and the Official respondents, has not supported either the case of the petitioner or the case of the private respondents. On the other hand, the Learned counsel for the private respondents has submitted that due to the conditions Prevailing in the Department, the Government had already taken a policy decision to include the cadre of Technical Assistant as a feeder category for appointment to the post of Assistant Engineer by way of recruitment by transfer; that accordingly the second respondent had been directed to send necessary proposal for amending the service rule to bring it in tune with the policy decision; that till the consideration of such a proposal by the rule making authority, inclusion of the category of Technical Assistant in the feeder category shall be considered to be in accordance with the administrative direction issued in respect of a field unoccupied and that therefore, the recruitment by transfer made based on the Government order supplementing the statutory rule cannot be said to be obnoxious or illegal.

12. In this regard, learned counsel for the private respondents relies on the following authorities:

1. B.N. Nagarajan and Ors. Etc., appellants Vs. State of Mysore and Others etc., reported in AIR 1966 Sc 1942 equivalent to (1966) 3 SCR 682;
2. Nagpur Improvement Trust Vs. Yadaorao Jagannath Kumbhare and Others reported in (1999) 8 Supreme Court Cases 99;
3. Tamilaga Asiriyar Koottani rep. By the General Secretary V. Annamalai, No. 52, Nallathambi Street, Triplicane, Chennai – 5, appellant / petitioner Vs. The Government of Tamil Nadu rep. By its Secretary, School Education Department, Fort St. George, Chennai – 9 and 19 ors., Respondents in both the writ appeal and the writ petitions resported in 2005 writ L.R. 389; and
4. Cable Operators Assocaition of Tamizhagam rep. By its President, A.P.Muruhkadaasan, Kancheepuram vs. Commissioner of Police / Authorized officer, Greater Chennai, Egmore, Chennai and others reported in (2011) 6 MLJ 281.

